ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாதங்களுக்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of July – December 2023)

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

கடித எண்.9046/பக5(1)/2023-2, நாள் **28.07.2023**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் – 2009-2010 மற்றும் 2009-2010 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அரசு /நகராட்சி /மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து துவக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 912 பணியிடங்களுக்கு **ஜூலை** 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization ) வழங்குதல்-சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை)எண்.101, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள் 15.05.2008.
2. அரசாணை (நிலை)எண்.109, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள் 04.05.2009.
3. அரசாணை (நிலை)எண்.162, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள்:13.07.2009
4. அரசாணை (நிலை)எண்.101, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை, நாள்: 24.04.2009.
5. அரசாணை (நிலை)எண்.170, பள்ளிக் கல்வி (மேநிக2) துறை, நாள்:15.07.2009.

6. அரசாணை (நிலை)எண்.232, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள்:11.08.2010.
7. அரசாணை (1டி)எண்.215, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள்:29.07.2022.
8. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 00518/எல்/இ3/2021, நாள்: 10.07.2023.

-------------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், மற்றவற்றோடு, 2008-09 ஆம் கல்வியாண்டில் 100 அரசு, ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தியும், உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளுக்கு, பள்ளி ஒவ்வொன்றிற்கும் இரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.5500-175-9000 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் இவ்விரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் ஒரு பணியிடத்தை 2008-09 ஆம் கல்வி ஆண்டிலும் மற்றொரு பணியிடத்தை 2009-10 ஆம் கல்வி ஆண்டிலும் நிரப்ப அனுமதியளித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளுக்கு பள்ளி ஒவ்வொன்றிற்கும் 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், மற்றவற்றோடு, 2009-10 ஆம் கல்வியாண்டில் 100 அரசு, ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளுக்கு, பள்ளி ஒவ்வொன்றிற்கும் இரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.5500-175-9000 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும், இவ்விரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் ஒரு பணியிடத்தை 2009-10 ஆம் கல்வி ஆண்டிலும் மற்றொரு பணியிடத்தை 2010-11 ஆம் கல்வி ஆண்டிலும் நிரப்ப அனுமதியளித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், மற்றவற்றோடு, 2009-10 ஆம் கல்வியாண்டில் கூடுதலாக 15 அரசு, ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அனுமதியளித்தும், நிலை உயர்த்தப்படும் இந்த 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 2 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 30 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இந்த 2 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் 2009-10 ஆம் கல்வியாண்டில் 1 பணியிடமும், 2010-11 ஆம் கல்வியாண்டில் மற்றொரு பணியிடமும் வழங்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

4. பார்வை நான்கு மற்றும் ஐந்தில் காணும் அரசாணைகளில், மற்றவற்றோடு, 2009-10 ஆம் கல்வியாண்டில் முறையே 100 மற்றும் 15 அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு பள்ளி ஒவ்வொன்றிற்கும் 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 575 (115 x 5 = 575) முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

5. பார்வை ஆறில் காணும் அரசாணையில், மற்றவற்றோடு, 2009-10 ஆம் கல்வியாண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளாக இயங்கிவரும் பள்ளிகளிலிருந்து தனியாக பிரித்து துவக்கப்பட்ட 7 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 7 புதிய உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300-34800+ரூ.4600/- என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக தோற்றுவித்தும், அப்பணியிடங்கள் தோற்றுவிக்கும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. பார்வை ஏழில் காணும் அரசாணையில், பார்வை ஒன்று முதல் ஆறு வரை காணும் அரசாணைகளில் தோற்றுவிக்கப்பட்ட 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2022 முதல் 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7. மேற்காணும் 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி இயக்குநர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு ஜூலை-2023 ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க

வகையில் சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

8. மேற்குறிப்பிட்டுள்ள 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 912 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஜுலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஜுலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.கு.எண்.27555/கல்வி(2)/2023, நாள் 28.07.2023 இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)த் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இவ்வியக்குநரக ந.க.எண்: 00518/அ/இ3/22 நாள்: 28.07.23

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்:-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்

இணை இயக்குநர் (நா.ந.பணி)க்காக

அரசு கடித எண்.9046/பக5(1)/2023-2, நாள்: 28.07.2023 இன் இணைப்பு

2008-09 மற்றும் 2009-10 ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து துவக்கப்பட்ட மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 1512 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களில், 912 பணியிடங்களின் விவரங்கள்:-

| **அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்** | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4600 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-16, ரூ.36,400-1,15,700/- |
| முதுகலை பட்டதாரி ஆசிரியர்<br>உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4800 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-18, ரூ.36,900 -1,16,600/- |

| **வ. எண்.** | **பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை** | **ஆண்டு மற்றும் பணியிட விவரம்** | | **கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம்** |
|---|---|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி, நாள்.15.05.2008. | 2009-10 | 100 பட்டதாரி ஆசிரியர்கள் | அரசாணை (1டி) எண்.224, பள்ளிக்கல்வி[பக5(1)]த் துறை, நாள்: 12.08.2022. (01.01.2022 முதல் 31.12.2022 வரை) |
| 2. | அரசாணை (நிலை) எண்.109, பள்ளிக்கல்வி, நாள் 04.05.2009. | 2009-10 | 100 பட்டதாரி ஆசிரியர்கள் | |
| | | 2010-11 | 100 பட்டதாரி ஆசிரியர்கள் | |
| 3. | அரசாணை(நிலை) எண்.162, பள்ளிக் கல்வி, நாள்.13.07.2009. | 2009-10 | 15 பட்டதாரி ஆசிரியர்கள் | |
| | | 2010-11 | 15 பட்டதாரி ஆசிரியர்கள் | |
| 4. | அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி, நாள்-24.04.2009. | 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள். | | |
| 5. | அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக்கல்வி, நாள்.15.07.2009. | 75 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள். | | |
| 6. | அரசாணை(நிலை) எண்.232, பள்ளிக்கல்வி, நாள். 11.08.2010. | 7 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் | | |
| | மொத்த பணியிடங்கள் | 912 | | |

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.